# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1982/6 - 2016 අගෝස්තු මස 30 වැනි අඟහරුවාදා - 2016.08.30

*1982/6 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 30 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**விஞ்ஞான, தொழில் நுட்பவியல் மற்றும் ஆராய்ச்சி அமைச்சு**

இராஜாங்க அமைச்சர்களுக்கு விடயங்கள் மற்றும் செயற்பாடுகளை ஒதுக்கீடு செய்தல்

2015, செத்தெம்பர் மாதம் 21 ஆந் திகதியினையும் 1933/13 ஆம் இலக்கத்தையும் கொண்ட அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 43 ஆவது உறுப்புரையின் (1) ஆம் பந்தியின் கீழ் எனக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட விடயங்கள் மற்றும் செயற்பாடுகள் என்பனவற்றிற்குள் கீழே அட்டவணைக்குள் தரப்பட்டுள்ள விடயங்கள் மற்றும் செயற்பாடுகள் என்பன இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 44 ஆவது உறுப்புரையின் (5) ஆம் பந்தியில் உள்ள நிபந்தனைகளுக்கு அமைவுற விஞ்ஞான, தொழில்நுட்பவியல் மற்றும் ஆராய்ச்சி இராஜாங்க அமைச்சருக்கு இவ் அறிவித்தலில் உள்ள திகதியிலிருந்து செல்லுபடியாகும் வகையில் ஒதுக்கீடு செய்யப்படுகின்றது என, இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

| நிரல் I<br>விடயங்களும் மற்றும் செயற்பாடுகளும் | நிரல் II<br>திணைக்களங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்கள் | நிரல் III<br>அமுல்படுத்தப்படவேண்டிய சட்டங்கள் |
|---|---|---|
| 1. கிராமிய சமுதாயத்தினரின் வாழ்கைத் தரம் சிறப்பாக அமைவதற்கு புதிய கண்டு பிடிப்புக்கள் மற்றும் தொழில் நுட்பங்களை வழங்கல்<br><br>2. கிராமிய பொருளாதாரத்தை மேம்படுத்தல் | பிரதேச செயலக மட்டத்தில் விதாதா வள நிலையங்களின் ஊடாக | - |

சுசில் பிரேமஜயந்த (பா. உ.),
விஞ்ஞான, தொழில்நுட்பவியல் மற்றும் ஆராய்ச்சி அமைச்சர்.

விஞ்ஞான, தொழில் நுட்பவியல் மற்றும் ஆராய்ச்சி அமைச்சு,
3 ஆவது தளம்,
கட்டடம் 1,
செத்சிறிபாய,
பத்தரமுல்லை,
2016, ஓகத்து 25.

9- 534



இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.